ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2385/14 - 2024 මැයි මස 21 වැනි අඟහරුවාදා - 2024.05.21
*2385/14 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

**தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபை**

சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (136 ஆம் அத்தியாயமாகிய) 33(1) (அ) ஆம் பிரிவின் கீழ், தொழில் அமைச்சர் அவர்களால் ஆக்கப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதிய 2381/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரமான கட்டளையின் வாயிலாக தொழில் ஆணையாளரின் அதிகாரத்தினைக் கொண்டு, தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள் தொடர்பாக கீழ்க் காணப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆகக்குறைந்த கொடுப்பனவு அளவினை அக்கட்டளைச் சட்டத்தின் 33(2) ஆம் பிரிவின் கீழ் நிர்ணயிப்பதற்கு உத்தேசித்துள்ளார் என அக்கட்டளைச் சட்டத்தின் 33(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29(3) ஆம் பிரிவின்கீழ் இத்தால் அறிவிக்கின்றேன்.

இந்த முடிபு 2024 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்.

**ஆர். பி. ஏ. விமலவீர,**
செயலாளர்,
தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு.

“மெஹெவர பியெச”,
தொழில் திணைக்களம்,
கொழும்பு 05,
2024, மே 21.

1A - G 41972 — 09 (2024/05)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1945 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதிய 9441 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் உள்ள அட்டவணையில் உள்ளவாறு பிரசுரிக்கப்பட்டதுடன், காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்பட்டனவுமான முடிபுகள் 2021, மாச்சு மாதம் 05 ஆந் திகதிய 2217/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் இறுதியாக வேறுபடுத்தப்பட்டதுமான முடிபுகள் II ஆம் பகுதிக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பகுதியினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படல் வேண்டும்.

**பகுதி II**

**தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள வேலையாட்களுக்கான கொடுப்பனவு நடைமுறை**

| இலக்கம் | விவரணம் | கொடுப்பனவு |
|---|---|---|
| I. | நாளாந்தச் சம்பளம்<br>(இத்தொகை நாளாந்த வரவு செலவுத் திட்ட நிவாரணப்படியை உள்ளடக்குகின்றது என்பதுடன் ஊ. சே. நி. மற்றும் ஊ. ந. நி. கொடுப்பனவிற்கு ஏற்புடையதாகும்.) | ரூபா. 1350.00 |
| II. | நாளாந்த விசேட படி | ரூபா. 350.00 |
| III. | நாளாந்த மொத்தக் கொடுப்பனவு | ரூபா. 1700.00 |
| IV. | மேலதிக கிலோ கிராமிற்கான விகிதம் | ரூபா. 80.00 |

EOG 05-0163/1

---

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

**இறப்பர் வளர்த்தல் மற்றும் மூல இறப்பர் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபை**

சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (136 ஆம் அத்தியாயமாகிய) 33(1) (அ) ஆம் பிரிவின் கீழ், தொழில் அமைச்சர் அவர்களால் ஆக்கப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதிய 2381/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரமான கட்டளையின் வாயிலாக தொழில் ஆணையாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினைக் கொண்டு, இறப்பர் பயிரிடல் மற்றும் மூல இறப்பர் உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள் தொடர்பாக கீழ்க் காணப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆகக்குறைந்த கொடுப்பனவு அளவினை அக்கட்டளைச் சட்டத்தின் 33(2) ஆம் பிரிவின் கீழ் நிர்ணயிப்பதற்கு உத்தேசித்துள்ளார் என அக்கட்டளைச் சட்டத்தின் 33(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29(3) ஆம் பிரிவின்கீழ் இத்தால் அறிவிக்கின்றேன்.

இந்த முடிபு 2024 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்.

**ஆர். பி. ஏ. விமலவீர,**
செயலாளர்,
தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு.

"மெஹெவர பியெச",
தொழில் திணைக்களம்,
கொழும்பு 05,
2024, மே 21.

**அட்டவணை**

இறப்பர் வளர்த்தல் மற்றும் மூல இறப்பர் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்ட முடிபுகள் 1949 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 25 ஆந் திகதிய 10047 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் உள்ள அட்டவணையில் உள்ளவாறு பிரசுரிக்கப்பட்டதுடன், காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்பட்டனவுமான முடிபுகள் 2021, மாச்சு 05 ஆந் திகதிய 2217/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் இறுதியாக வேறுபடுத்தப்பட்டதுமான முடிபுகள் II ஆம் பகுதிக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பகுதியினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுதல் வேண்டும்.

**பகுதி II**

**இறப்பர் வளர்த்தல் மற்றும் மூல இறப்பர் உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள வேலையாட்களுக்கான கொடுப்பனவு நடைமுறை**

| *இலக்கம்* | *விவரணம்* | *கொடுப்பனவு* |
|---|---|---|
| I. | நாளாந்தச் சம்பளம்<br>(இத்தொகை நாளாந்த வரவு செலவுத் திட்ட நிவாரணப்படியை உள்ளடக்குகின்றது என்பதுடன் ஊ. சே. நி. மற்றும் ஊ. ந. நி. கொடுப்பனவிற்கு ஏற்புடையதாகும்.) | ரூபா. 1350.00 |
| II. | நாளாந்த விசேட படி | ரூபா. 350.00 |
| III. | நாளாந்த மொத்தக் கொடுப்பனவு | ரூபா. 1700.00 |
| IV. | மேலதிக கிலோ கிராமிற்கான விகிதம் | ரூபா. 80.00 |

EOG 05-0163/2